வி. மைக்கல் கொலினின்

# எழுதித்தீரா பிரியங்கள்



மகுடம்



நான் கொஞ்சுவதற்கும்

நீ விஞ்சுவதற்கும்

இடையில்

காமத்தின்

நூலில்

பறக்கிறது

காதல் பட்டம்.

வி. மைக்கல் கொலினின்

# எழுதித்தீரா பிரியங்கள்



மகுடம்

இல.90, பார்வீதி,
மட்டக்களப்பு 30000
இலங்கை.

Title :

**Ezhuthith Theeraa Piriyangal**

**© W.Michael Collin**

ISBN : 978 - 624 - 5849 - 09 - 3

மகுடம் பதிப்பக வெளியீடு - 42

நூல் தலைப்பு:

**எழுதித்தீரா பிரியங்கள்**

நூல் ஆசிரியர்:

**வி.மைக்கல் கொலின்**

வகை : **புதுக்கவிதை**

முதற்பதிப்பு : 24 கார்த்திகை 2021

விலை : 300.00

பக்கங்கள் : 40

பதிப்பாளர்

**வி.மைக்கல் கொலின்**

நூல்வடிவமைப்பு:

**த.சங்கர்**

அச்சு :

**வணசிங்கா அச்சகம், மட்டக்களப்பு.**

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளர் எழுத்துபூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும் புத்தக விமர்சனத்திற்கு மட்டும் புத்தகத் திலிருந்து மேற்கோள் காட்ட அனுமதிக்கப்படுகின்றது

மகுடம்

இல.90, பார்வீதி,

மட்டக்களப்பு 30000, இலங்கை.

தொ.பே.இல. 0774338878,

magudammichael@gmail.com

# கூடடைந்த கவிப்பறவை

என் நான்காவது கவிதை நூலுடன் உங்களை சந்திப்பதில் பெரு மகிழ்வடைகிறேன். காதலும் அரசியலும் கலந்தது தான் மனித வாழ்க்கை என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவன் நான். ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் காதல் உண்டு. காதல் என்பது கூடு பறவையை தேடுவதல்ல, மாறாக அது பறவைகள் தேடும் கூடு. தனக்கான சரியான கூட்டை அடைந்தவன் வாழ்க்கை சொர்க்கமே.

காதலிக்கும் எல்லோருக்குள்ளும் ஒரு கனவு உண்டு. தன் காதலிக்கு/காதலனுக்கு தான் ஏதாவது செய்ய வேண்டும் என்ற நினைப்பு என்றும் மனதுக்குள் கனன்று கொண்டேயிருக்கும். என் கனவு இன்று நனவாகிறது. ஆறு வருடங்கள் காதலியாய் இருபத்திரண்டு வருடங்கள் காதல் மனைவியாய் வாழ்பவளை என் கவிதைக்குள் வாழ வைத்தேன். தமிழ் கவிதா உலகில் ஆயிரக்கணக்கான காதல் கவிதை நூல்கள் உண்டு. இது புதிதல்ல. ஆனாலும் இது புதிது! காதல் மனைவியின் படங்களையும் தாங்கி வெளிவரும் கவிதை நூல் என்ற வகையில் இது புதிது! காதல் என்பதே என்றும் புதியதுதானே? வாழ்க்கையை புதியதாக்கும் திறவு கோல் காதலிடம் உண்டு.

இக் கவிதை நூலை எங்கள் இருபத்தியிரண்டு வருட திருமண ஆண்டின் நினைவுப் பரிசாக வெளியிடுகிறேன். இந்தக் கவிதைகளில் எங்கோ ஓரிடத்தில், ஏதோ ஒரு வரியில் நீங்கள் உங்களை தரிசிக்க முடியும். காதலெனும் பெருவெளியில் ஒரு புள்ளியாய் உங்களையும் உணர முடியும்.

இந்தக் கவிதைகளுக்குள்ளும் அரசியல் உண்டு. ஆழ்ந்து நோக்கின் அதனையும் புரிய முடியும்.

இறுதியாக.. இந் நூலுக்கான அழகிய அணிந்துரை தந்த என் மண்ணின் பேராசிரியர் பாலசுகுமார், இந் நூலை வடிவமைத்த நண்பர் த.சங்கர், வணசிங்கா அச்சகத்தார், என்றும் என் துணையாக விருக்கும் என் காதல் மனைவி ஹஜேந்தினி மைக்கல், மகன்கள் ரொகான் ருக்சன், நிருஷான் எல்லாவற்றுக்கும் மேலாக இந் நூலை வெளியிடும் என் பாடசாலை கால நண்பி நிவாஷினி (ஜேர்மனி) ஆகியோருக்கு என் இதய நன்றிகள்.

அன்பகலா பிரியங்களுடன்
**மகுடம் வி. மைக்கல் கொலின்.**



என் காதலியாய்
மனைவியாய்
என்னோடு
வாழ்ந்து கொண்டிருக்கும்
என் காதல் ராணிக்கு
இந்நூல்....

மழையை அழைத்துவரும்
சாதகப்பறவை போல்
காதலை அழைத்துவரும்
என் நேசப்பறவை நீ...

# எழுதித் தீரா பிரியங்கள்

**கா**தல் எப்போதும் நம்மை மகிழ்வின் எல்லை வரை கொண்டு செல்லும். அதை எழுதித்தீர்ப்பது எப்படி என்பதை சுவைத்து சுவைத்து சொல்லியிருக்கிறார். காதலியே மனைவியாய் வாய்க்கும் போது அதன் சுவை அதீதமானது. அது கொலினுக்கு வாய்த்திருக்கிறது. நேசத்தின் தெருக்களில், காதலில் மூழ்கி முத்து முத்தாய் சேர்த்து, ஒரு அபூர்வமான "ஆதலினால் காதல் செய்வீர்" என தன் காதலியை காதலித்து காதலித்து அதனால் வரும் களிப்பை நம்மோடு பகிர்ந்து பந்தியிட்டிருக்கிறார் கொலின்.

"விண்ணிலிருந்து
பூமியில் விழும்
எரி நட்சத்திரமாய்
நான் உன்னில்
வீழ்ந்து எரிந்து
போகிறேன்.
எரிமலை குழம்பென
வெடித்துச் சிதறுகிறாய் நீ."

காதல் எனும் எரி நட்சத்திரம் நம்மையும் எரித்துச் சாம்பலாக்கும் இவர் கவிதை

தமிழ் இலக்கியத்தில் காதலைப் பாடாத கவிஞர்கள் இல்லை என்றே சொல்லலாம். தன் காதலியான மனைவிக்கு கவிதை வண்ணங்களால் ஒரு காவியம் படைத்திருக்கிறார் கொலின். காதலை சொல்லித் தீர்ப்பதே முடியாத காரியம். ஆனால் கொலின் எழுதித் தீர முயன்றிருக்கிறார். எப்படி முடியும் முற்றுப் புள்ளி இட முடியாத எழுதித் தீராத காதல் இது...

"பனிப்பாறையாய்
உறைந்து கிடக்கும்
உன் கூந்தல் வருடுகிறேன்
தீப்பற்றிய மூங்கில் காடென
எரிகிறாய்
பனிப்பாறைகள் உருகுகின்றன"

உறைந்த பனிப் பாறையும் தீப்பற்றிய மூங்கில் காடும் காதலின் இரு வேறு முகங்கள் இரண்டையும் இணைத்து நம்மை மிரள வைக்கிறார் கொலின்

தன் மனைவியின் அழகிய புகைப்படங்களிடை கவிதைகளால் கோலம் போட்டிருக்கிறார் கொலின். எழுதித் தீரா பிரியங்களை வாசிக்க வாசிக்க நமக்குள்ளும் பிரியங்களின் வழி காதலை சொல்ல கவிதைகள் நம்முள் வந்து முட்டி மோதுகின்றன.

வாழ்வின் பக்கங்களில் காதலின் பயணம் எப்போதும் நம்மோடு கை கோர்த்துக் கொண்டிருக்கும் அதை எழுதித் தீராத இலக்கியமாக்கியிருக்கிறார்.

காதலில் களம் ஆடுதல் என்பது இது தானோ விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையில் காதலில் கசிந்துருகி கூடி மயங்கி தன் காதலை கொண்டாடியிருக்கிறார். காதல் எனும் திகைப் பூண்டில் மிதித்தது போல் இவர் கவிதைகள் வந்து வீழ்கின்றன.

நான் நினைக்கிறேன் தமிழில் இது புது முயற்சி.

வாழ்த்துகள் கொலின்.

- **பேராசிரியர் பாலசுகுமார்** (லண்டன்)
மேனாள் முதன்மையர்
கலை கலாசாரப் புலம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

அதீதத்தின்
பிரியங்களுடன்
பெருங்கடலென
பரந்திருக்கிறாய் நீ
என்றுமே தீரா
பெருந்தாகத்துடன்
நீந்தும்
மீன் குட்டியாய் நான்.

நன்றி.
இந் நூல் வெளியீட்டுக்கு உதவிய நண்பி
நிவாஷினி (ஜேர்மனி)



**உ**ன் நினைவென்னும்

நீர்க்குமிழி

உடைந்து வழிகிறது

திசைகள் தோறும்

பாய்கிறது

காதல் நதி

காலத்தின் ஆர்ப்பரிப்பில்

மண்ணில் விழும்

பனித்துளியின் ஓசை

அது எம் காதல் நெஞ்சம்

பரிமாறும் மௌனத்தின் பாஷை.

உன் பருவத்தின்
தோட்டத்தில்
ஆயிரமாயிரம்
பூக்கள்
நீ சூடப்போகும்
பூ எது?
அந்த உயிர்ப்பான நேசத்தின்
பூவாய்
நான் இருத்தல்
கூடாதோ?

என் தேடலின்
அக்கினிகுஞ்சு
நீ
உன் நேசத்தின்
பனித்தூறல்
நான்
காதலின் மாயச்சுழி நீ
உன் சுழியில் மூழ்கி கரையேறும்
காலச்சுழியோடி நான்.






மனக்கிண்ணம்
ததும்பத் ததும்ப
காதல் செய்கிறேன்
என் உயிர்ப்பூவில்
வழிகிறது
ஜீவிதத்தின் அன்பு.

என் உயிர்த்தேனை
உறிஞ்சும்
உன் விழித்தேனீக்களின்
ரீங்காரம்
இன்னும் உனக்கு
கேட்கவில்லையா?
ஓர் கோடை கால
காதலின் தகிப்புடன்
என் அடுத்த
ஜென்மத்துக்கான
காதலையும்
பிறப்பையும்
உனக்கே தருகிறேன்
நீ பிறந்தால்
அங்கு நான் இருப்பேன்
கண்மணி!

**கா**ல நெடுமை தோறும்
என் தீரா தாகத்தின் தண்ணீராய்
அவளைப் பருகுகிறேன்
என் தாகமும் தீரவில்லை
அவளும்
குறையவில்லை

**நீ**
வாசிக்கும்
என் கவிதைகள்
வெட்கித்து நிற்கின்றன
கவிதை ஒன்று
கவிதை வாசிப்பதால்

**உ**ன் மௌனத்தைத்
தொட்டு
எழுதுகிறேன் கவிதை
தாள்கள் எங்கும்
வெட்கப் பூ பூக்கிறது.



**நெ**ற்றியில்
நீ தந்த
முத்தத்தில்
உருகி வழிந்து
கொண்டிருக்கிறது
ஒருகடல்
நிறைந்த
காதலின்
பிரியங்கள்

**எ**ன் கனவில்
உன் நினைவுகளை
எழுதிச் செல்கிறாய்
என் உடலில்
உன் உயிரை
விதைத்துச்
செல்கிறாய்.

**எ**ன் தூண்டிலில்
சிக்கிய மீனை
பாவம் என்கிறாய்
உன் விழிகளின்
தூண்டிலில்
சிக்கிய என்னுடன்
கோபம் என்கிறாய்
என்ன முரண் நகை?



உங்கள்
கவிதைகளை
பலர் திருடுகிறார்கள்
என்கிறாய்
அவர்களை
மன்னித்து விடலாம்
ஆனால்
என்னையே திருடிவிட்டு
தெரியாதவள் போல்
நிற்கிறாயே நீ.

உன்னைக்காணாத
பொழுதுகளின் வலிகள்
ஓயாத அலைகள்
உன்னைக் கண்ட
பொழுதுகளின்
மயக்கம்
சுனாமிப் பேரலைகள்!



**உ**ன் முகத்தின் முன்னே
சரிந்து விழும்
அந்த ஒற்றைமுடியின்
ஒய்யாரத்தில்
தொங்கிக்கொண்டிருக்கிறேன்
எப்போது என்னை
உன்
இதயத்தில்
இறக்கிவிடப்போகிறாய்?

**எ**ன் கழுத்தில்
நீங்கள்
முகம் புதைக்கும்
போதெல்லாம்
களவு போகிறது
என் முத்தங்கள்
என்கிறாய்
திருடனிடமே
புகார் கொடுக்கும் திருடி நீ.

## வா

எம் காதலின்
குறுக்கெழுத்து
வெற்றிடங்களை
நிரப்பிக் கொள்வோம்
இடமிருந்து
வலமாக
வலமிருந்து
இடமாக
மேலிருந்து கீழாக
கீழிருந்து மேலாக
சதுரங்களை
நிரப்புவோம்
வாழ்க்கை வெற்றிடங்களை
காதல் எழுத்துக்களால்
நிரப்பிக்கொள்வோம்.






உன் மௌனத்தின் முத்துக்களை
வெட்கமெனும் நூலில் கோர்க்கிறேன்
நாளை உன் கழுத்தில் கட்டப்போகும்
தாலிக்கயிறாக..

பாலைவன மணற்பரப்பில்
பயிர்செய்து
தண்ணீர் இன்றி
பயிர் வளர்க்கும்
மாயக்காரி நீ
என்
என் சோலை வன
மனப்பரப்பில்
பூப்பறிக்கும்
ஜாலக்காரி நீ!

பூக்களை வரைகிறேன்
ஓவியத்தில் நீ
உன்னை
வரைகிறேன்
ஓவியமெங்கும்
பூக்கள்.

கடற்கரை
மணலில்
சிப்பிகள் பொறுக்கும்
சிறுவனின் கரத்தில்
அலைகளால் அடித்து வரப்பட்ட
வலம்புரிச் சங்கு
கிடைத்தால்
எப்படியிருக்குமோ?
அப்படித்தான்
நீ
எனக்குக் கிடைத்ததும்.
காற்று வாங்கச் சென்றவனுக்கு
கடல் ஆம்பல் கிடைத்தது போல்
கிடைத்தவள் நீ !





மேகங்கள் உடைந்து
மழையென
கொட்டுகிறாய் நீ

குற்றால
நீர்வீழ்ச்சியின்
வெண் நுரைகளென
ததும்புகிறது
ஆத்மாவின் பாடல்

கற்பூரமென
கரைந்தொழுகும்
பின் நவீனத்துவமா
நம் காதல்?

காலத்துக்கும்
காலம் சொல்லும்
நேசப்பூக் கவிதையல்லவா?



யானைத்தந்தம்
போல்
பெறுமதியானது
உனது திமிர்

நீயில்லா பொழுதுகள்
நீள்கிறது வெறுமையாய்
காலச் சிலுவையில்
தொங்குகிறது
எனக்கான இரவுகள்
உன் பனிப்பார்வை
பொழியட்டும்
இக்கணமே
உயிர்ப்பேன் நான்.



உன் அன்பின் சிறு தூறல்
என் மீது பெருமழையாய்
பொழிகிறது.

எழுதி முடித்ததும்
வழிந்து ஓடிவிடுகிறது
கவிதை

உன் அன்பெனும்
அதீத அடைமழையில்
தினமும் நனைந்து
என் சர்வாங்கமும்
அதில் திளைத்து
புதிது புதிதான
உன் மர்ம முத்தங்களில்
மூர்ச்சித்து
கிடப்பதை விட
வேறென்ன
வேண்டும் எனக்கு?

நிலைக்
கண்ணாடியில்
ஒட்டிய
உன் நெற்றிப்பொட்டை
கொத்திக்கொண்டிருக்கிறது
என் மனப்பறவை.



**நா**னும் இயேசுதான்
உன் நினைவென்னும்
சிலுவையில்
தொங்கிக் கொண்டிருக்கும்
நானும் இயேசுதான்

அவர் உலக மக்களின்
பாவங்கள் போக்க
நான் உன்மீதான
காதலைக் காக்க

இருவரும்
இன்னமும்
தொங்கிக் கொண்டுதான்
இருக்கிறோம்.

ஆகவே
நானும் இயேசுதான்.

# நான்கு கவிதைகளும் ஓர் பின்குறிப்பும்

## நான்

என்னைப் போலவே
விழித்தபடி
அங்கும் இங்குமாய்
என்னுடன்
புரள்கிறது
இந்த இரவு
இன்னமும்
ஈரத்துடன்
உன்
ஒற்றை முத்தம்.

## பூட்டு

திகட்டத் திகட்ட
நீ
தரும் முத்தங்கள்
தொடர்கிறது
உடைந்து
மீண்டும்
உடைந்து
துடிக்கிறது மனசு
இந்த இரவு
விடிந்து விடுமோ
என்ற அச்சத்தில்.
இரவுக்கு
பூட்டு போட்டு
காத்திருக்கிறது
கனவு.



## நீ

நான்
தருவதை எல்லாம்
வாங்கிக் கொள்கிறாய்
திருப்பிக் கேட்டால்
வெட்கம் என்கிறாய்.

## சாவி

விடிந்த பின்னும்
விழிக்க மறுக்கும்
என் இமைப் பூட்டுக்களை
உன் ஒருமுத்தத்தால்
திறந்து விடுகிறாய்.

## பிற்குறிப்பு

நான்
பூட்டு
நீ
சாவி.

# அலையழைக்கும் நினைவுகள்

கனவுக்கு வெளியே
ஓர் நாள்
கல்லடி கடற்கரை
சவுக்குத் தோப்பின் முன்னே
அவளும் நானும்
அருகருகே அமர்ந்திருந்தோம்.

உடைபடும்
மௌனங்களுக்கிடையே
கசிந்து கொண்டிருந்தது
காதல் நீர்.

சுனாமி பேரலைகள் சப்பித் துப்பினாலும்
மீண்டும் மண்ணில் ஆழ வேரூன்றி
வானோடு கதை பேசி நின்றன
சவுக்கு மரங்கள்.

பௌர்ணமி
நாளொன்றில்
பொங்கி எழுந்த
அலைகளின்
வலைவீச்சில்
எத்தனையோ
மனித மீன்களை
காத்து நின்றது
இந்த சவுக்கு தேவதைகள் தானே?

அலையோடு அலையாக
ஆலயங்களும்
கோயில்களும்
அள்ளுப்பட்டுச்
செல்கையிலே
அசைந்து கொடுத்தாலும்
அடிபட்டுச் சென்றாலும்
அலைகளின்
ரௌத்திரத்தை
அடக்கி
மடக்கியது
இந்த மரங்கள் தானே?

நிமிர்ந்து பார்க்கிறேன்
சவுக்கு மர உச்சியிலே
பட்டம் ஒன்று
சிக்குப் பட்டுக் கிடந்தது
நூலை
அசைத்து
அசைத்து
பட்டத்தை மீட்டெடுக்க
முயற்சித்துக் கொண்டிருந்தான்
கடற்கரை மணலில் ஓர் சிறுவன்.

சிறுவனுடன் கொஞ்சநேரம் கண்ணாமூச்சி
விளையாடிய மரங்கள்
அவனது பட்டத்தை
அவனிடமே திருப்பிக் கொடுத்தன.

இயற்கை
அவரவர்க்குரியதை
அவரவர்க்கே
திருப்பிக் கொடுத்து விடுகிறது.

மனிதன் மட்டுமே
மற்றவர்களதையும்
தனக்குரியதாக்குகிறான்.

மீண்டும்
வானில் பறந்தது
பட்டம்.

மகிழ்ச்சிப் பூக்கள் பூத்த
சிறுவனின்
முகத்தைப் பார்த்து சிரித்தபடியே
இருவரும் எழுந்து கொள்கிறோம்.

கடற்கரையிலிருந்து
வீடு திரும்புகையில்
காவலரண்கள்
அமைப்பதற்காய்
சவுக்கு மரங்களை
அடியோடு தறித்து வண்டியில் ஏற்றும் காட்சி

மனசு வலிக்க
விடைபெறுகையில்
வானம் அழத் தொடங்கியது
கடலலைகள்
பின் வாங்கி
கடலுக்குள் சென்றன.

# எழுதித் தீரா பிரியங்கள்

**கா**லமெனும் கட்டிலில்
கலைந்து கிடக்கிறோம்
உன்விழிகளில்
உதிரும் கண்ணீர்த் துளி
கண்ணாடியில்
படரும் பனித்துளியென
கன்னத்தின் வழியே வழிகிறது.

ஓர் துளிதான்
ஆனால் ஓராயிரம்
கடல் கொண்ட உவர்ப்பை குடித்ததாய்..

பனிப்பாறையாய்
உறைந்து கிடக்கும்






உன் கூந்தல் வருடுகிறேன்
தீப்பற்றிய மூங்கில் காடென
எரிகிறாய்
பனிப்பாறைகள் உருகுகின்றன.

ஆயிரம் கடல் குடிக்கும்
தாகத்தோடு நான்
சமுத்திரத்தையே
உருவாக்கும்
மழை மேகமாய் நீ.

உன்னதங்கள் வழியும்
உன் பள்ளத்தாக்குகளில்
பயணிக்கிறேன்
அராபியக் குதிரையின்
அடங்காத் திமிருடன்
பாய்கிறாய் நீ.

நேசத்தின் பனித்தூறலில்
ஒருவரை ஒருவர்
துளாவிக் கொள்கிறோம்.

உன் விம்மலின்
பேரொலி
விண்ணுக்கும்
மண்ணுக்குமாய்
அதிர்கிறது..



மலைச்சிகரத்தில்
ஊற்றெடுக்கும்
மாநதியின்
நீரோட்டம்
உன்னை ஊடறுத்துப் பாய்கிறது.

விண்ணிலிருந்து
பூமியில் விழும்
எரி நட்சத்திரமாய்
நான் உன்னில்
வீழ்ந்து எரிந்து
போகிறேன்.
எரிமலை குழம்பென
வெடித்துச் சிதறுகிறாய் நீ.

காமத்தின்
துகள்கள்
காலத்தின்
கட்டிலின் கீழே
சிதறிக்கிடக்கிறது.
காமன் கணை ஒன்று
முறிந்துதான் கிடக்கிறது.

எழுதித்தீரா பிரியங்கள்
காலத்தின் பக்கங்கள் எங்கும்
நிறைந்து கிடக்கிறது
ஒரு கவிதையாய்
நீயாய்..

# கை நழுவும் முத்தங்கள்

அலை என
அலை என
எழுந்து வருகிறாய்
நீ.

கரையின் ஓரத்தில்
பரந்த மணல் வெளியில்
மணலோடு பேசியபடி நான்.

எத்தனைப் பேரது
கனவுகள்
எத்தனைக் காதலின் கவிதைகள்
எத்தனை வாழ்க்கையின்
ரகசியம்
கொட்டிக் கிடக்கிறது
இம் மணல் வெளியெங்கும்.

என் கரத்தில் அள்ளிய மணலிலிருந்து
சில முத்தங்கள்
நழுவிச் செல்கின்றன
எந்தக் காதலர்
பரிமாறிக்கொண்ட
முத்தங்களோ?

கடல் இல்லா கரையுண்டு
கரையில்லா கடல் உண்டோ சொல்?

நீ
மீண்டெழும்
அலையாய்.. வந்து
என் கால்களை
நனைக்கிறாய்
வாழ்வின்
மர்ம முடிச்சுக்கள்
அவிழ்ந்து பட
காற்றின் பெருஞ்சுழியில்
கரைகிறது கை மணல்

கரங்களில்
ஒட்டியிருந்த
மணலை தட்டிவிட்டாலும்
ஒட்டியபடி கூடவே
வருகிறது
சில துகள்கள்
உன்னைப்போல்.

இதுதானா
வாழ்வெனும்
பெருநதியின்
ஞானக்குளியல்

ஆதியிலே
காதல் இருந்தது
அது நீயும் நானுமாய்
இருந்தது.

# பின்னிரவு பூபாளம்

உன் சுவாசத்தின்
கரங்களைப் பிடித்த படி
நேசத்தின்
மலர்த்தோட்டத்தில்
பவனி வருகிறேன் நான்.

இந்த பிரபஞ்ச
வெளியெங்கும்
நிறைந்திருக்கிறது
நம் காதல் பூபாளம்.

உனக்காக நான் எழுதிய
காதல் கவிதைகளெங்கும் கேட்கிறது
குற்றால
நீர்வீழ்ச்சியின் சப்தம்.

வனாந்தரங்களின் எல்லைகள் கடந்து
பாய்கிறது காதல் நதி.

உன் பற்கள்
மாதுளம் முத்துக்கள்.

உன் கூந்தல்
பூக்களின் காடு.

உன் விழிக்குளத்தில்
என் பார்வைத் தூண்டிலை

வீசும்போதெல்லாம்
காதல் மீன்களை
தந்து கொண்டுதான்
இருக்கிறாய் நீ.

தருவதில்
கர்ணனின்
மறு பிறப்பு நீ.

பொன்னாவரைப் பூக்களாய்
பூத்திருப்பவளே.

காலமெனும் மின்மினி
என் சொற்களோடு
அலைகிறது
முடிவில்லாக் காதலின்
பனித்துளியில் உறங்கிக்கிடக்கிறது
உன் மௌனத்தின் சக்கரவாகம்.

வெள்ளாட்டுக் குட்டிகளாய்
பின்னால் வரும் தேவதைகளை புறந்ததள்ளி
பச்சைப்புல்வெளியில் உன் பாதம் பதிக்கிறாய்.

வானம் தொட்டுவிடும் தூரம்  பறந்தாலும்
கழுகின் பார்வையில்
தப்ப முடியா பூமிப்பந்தைப்போல்
உன் பார்வையின்  பிடியில் நான்.

நான் கடல்
நீ ஆகாயம்.
வானத்தின் நீலம்
கடலில் கரைவது போல்
என்னில் கரைந்த
ஆகாயம் நீ.

நீ பெருமழையாய்,
இடியாய்,
மின்னலாய்
என்னுள் இறங்குகிறாய்
என்றும் ஓயா அலைகளை வீசி
உன்னைத் தாங்கிக் கொள்கிறேன் நான்.

காதல் அற்புதத்தின்
பேரழகு

மனக்கோயில்
சந்நிதியில்
எரிந்துகொண்டிருக்கும்
ஒற்றை நட்சத்திரம்

கனவுகள் வசிக்கும்
தூக்கணாங் குருவிக் கூடு

உன்மீதான என்
பேரன்பின்
அமானுஷ்யம்
புதிய வெளிகளை திறந்து விடுகிறது.





உனதும் எனதுமான
பாதங்கள் பதிவதற்காய்
காத்துக் கிடக்கிறது
பலநூறு பாதைகள்.

வெடித்துச் சிதறும்
எரிமலைக்குழம்பாய்
தருணம் பார்த்துக்
கனன்று கொண்டிருக்கும்
உன் காதல் நெருப்பு.

இமயத்தின் பனிப்பாறைகளாய்
பூத்துக் கிடக்கிறேன் நான்.

உன் நெருப்பை
அணைக்கவா
இல்லை
அணையவா?

# காடுகாண் காதல்



என்னைக் கடந்து போகும்
உன்
கால்விரல் மெட்டிச் சத்தம்
ஆயிரம் சிம்பொனிகளின்
அதிர்வுகளாய்

உன் முத்தத்தின்
சத்தத்தில்
பரவுகிறது
கற்பூரவள்ளியின் வாசனை

நேற்றைய என்
கனவு முத்தங்களை
இன்று திருப்பித் தருவாயா?

அசையாதே
உன்னைத் தொட்டுத் தான்
நான்
ஓவியம் வரைய வேண்டும்

வர்ணங்களின்
கலவையாய் நீ

உன்னில் குளித்து
கரையேறும்
பட்டாம் பூச்சிகள்தான்
எத்தனை அழகு
உன் வர்ணங்களைத்தான் அலைகள்
சுமந்து திரிகின்றதோ?

வெள்ளைப் புறாக்கள் பறக்கும்
ஆகாச வெளி நீ.

இருளின் நள்ளிரவில்
என்னை எழுதச்
சொல்கிறாய்.

ஆயிரம் கடலின்
பிரியங்களை ஒரே
புன்னகையில்
தருபவளே

நட்சத்திரங்கள்
உதிரும்
பின்னிரவுப் பொழுதில்
நீ சூரியனை வரைகிறாய்
இரவின் முகமெங்கும்
பாய்கிறது ஒளிவெள்ளம்
உன் கரங்களில்
இருப்பது தூரிகையா
மந்திரக்கோலா?


சூரிய கதிர்களைத் தொட்டு
கடலை வரைகிறாய்
அலைகளின் மீது
இருவரும் மிதந்து கிடக்கிறோம்.

"சொர்க்கத்தை
வரையக்கூடாதா?"
என்கிறேன்
நீ காடுகளைத் தீட்டிக் கொண்டிருக்கிறாய்
அடர்ந்த காடுகளுக்குள்தான்
எத்தனை சொர்க்கங்கள்?

"மரங்கள்
வளர்ந்தால்
பூமியும் சொர்க்கம்தான்" என்கிறாய்
ஆளுக்கொரு மரத்தை நட்டுவிட்டு
உறங்கப் போனோம்.

விடிந்தது
சொர்க்கத்தில்
ஆம் காடுளின் நடுவே நாம்.





# ததும்பும் நினைவுகள்

ஷாம்பெயின் போத்தலைத் திறந்தவுடன்
பொங்கித் ததும்பும்
வெண் நுரை போன்று
உன்னைப் பற்றிய நினைவுகள் பீறிட்டுப் பாயும்
இந்த மாய இரவின் நடுப்பக்கத்தில்
நட்சத்திரங்களை
எண்ணிக்கொண்டு நான்.

உன் இரவுக்குள்
ஓர் நிலவு
என்இரவில்
நீ மட்டுமே நிலவாய்.

தென்னங்கீற்றுக்களுக்கிடையே உறங்கும்
கிளிகளைப் போல்
உன் நினைவின் கீற்றுக்களிடையே என் கனவுகள்
உறங்குகின்றன.

உன் முத்தங்களோடு
நானும் பறக்கிறேன்
வானவில் மேகங்களுடன்
நாளும் மிதக்கிறேன்.

பூச்சூடி வந்தவள் நீ
என் மூச்சோடு
கலந்தவள் நீ.



காற்றின்
திசை வழியே
அள்ளுண்டு போகாமல்
கடலில்
புதையுண்டு
கப்பலைக் காக்கும்
நங்கூரம்போல்
என்
வாழ்க்கைக்
கப்பல்
உன் காதல்
என்னும்
நங்கூரத்தால்
கட்டுண்டு
கிடக்கிறது.

- வி. மைக்கல் கொலின்

மகுடம்
ISBN: 978-624-5849-09-3
9 786245 849093
300.00